கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் திறந்து வைத்தார். திறப்பு விழாவில் குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, நகர கழக பொறுப்பாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் விஜயகண்ணன், ஞானசேகரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் நாச்சிமுத்து, செல்வம், தங்கவேல் மாவட்ட நிர்வாகிகள் ராஜாராம், செல்வராஜ், வேலுமணி, குமாரபாளையம் நகர்மன்ற துணைத் தலைவர் வெங்கடேசன், இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடி ராஜா, கதிரவன், ஜெகதீஸ்குமார், முரளி, அன்பகம் இளமாறன், திரிசங்கு, சார்பு அணி நிர்வாகிகள் தனசேகர், ராதிகா, ஜெயதேவி, சௌந்தரம் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாணவ – மாணவிகளுக்கு

பல்கலைக் கழகங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்!

அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜன.9-

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (07.01.2025) நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் இந்திய அளவில் உயர்கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கும் வகையில் சீரிய திட்டங்களை வழங்கி செயல்படுத்தி வருகிறார்கள். மாணவ மாணவிகளின் கல்வித் தரம் உயர வேண்டும், மாணவ மாணவிகள் கல்வி கற்க பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்திய அளவில் மட்டுமல்லாது தமிழ்நாட்டை உலக அளவில் உயர்கல்வியில் சிறந்த முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உயர்கல்வித் துறை சார்பில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்பட்டு வருகிறது.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவத்தில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்தே.

இது போன்ற சம்பவங்கள் எந்தவொரு கல்வி நிறுவனத்திலும், நிகழாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கல்வி நிறுவனங்களில் இரவு நேரங்களில் அனைத்து பகுதிகளிலும் மின் விளக்குகள், காண்காணிப்பு கேமராக்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக கூர்நோக்கு பகுதிகள் கண்டறியப்பட்டு அங்கு மின்விளக்குகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட வேண்டும். கல்வி நிறுவன வளாகத் திற்குள் உள் நுழைபவர்கள் மற்றும் வெளியே செல்பவர்களின் தகவல்கள் பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும். வளாகத்திற்குள் கண்டிப்பாக மாணவர்கள் பேராசிரியர்கள், பணியாளர்கள் அனைவரும் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும். அவசர காலங்களில் உதவும் வகையில்

தமிழ்நாடு காவல் துறையால் உருவாக்கப்பட்டுள்ள "காவல் உதவி" செயலியின் பயன்பாடு குறித்து மாணவ - மாணவிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்கள் இரவு நேரங்களில் தொடர் ரோந்து பணியில் ஈடுபட வேண்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் மாணவ - மாணவிகளின் ஆலோசனையினையும் பெற்று அவற்றை செயல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், உயர்கல்வித் துறையை மேலும் செம்மைப்படுத்தவும் பதிவாளர்களின் ஆலோசனைகளை வரவேற்பதாக தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நான் முதல்வன், புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது, பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரி வளாகங்களில் வளாக பாதுகாப்பு, மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், ஆராய்ச்சி மாணவர்களுக்கு வாய்மொழித் தேர்வு மற்றும் பிறநடைமுறை களை சரியான நேரத்தில் நடத்துதல், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தல், உதவி மையம் / உள் புகார் குழுவின் நடவடிக்கைகள், மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு படிப்புகள், மின் ஆளுமை தொடர்பான முன்னெடுப்புகள், இடை நிற்றல் சதவீதத்தின் பகுப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கல்லூரிக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி. எ.சுந்தரவள்ளி, உயர்கல்வித் துறை இணைச் செயலாளர் துரை. ரவிச்சந்திரன் மற்றும் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், இணை இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

துணை முதல்வர் பிறந்த நாள் - 70 இடங்களில் பிரச்சாரக் கூட்டங்கள்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், ஜன. 9 -

விழுப்புரம் (தெற்கு) மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்களில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா தெருமுனை பிரசார கூட்டங்கள் 70 இடங்களில் நடைபெறுகிறது.

மாவட்ட கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிவித்த அறிவிப்பு வருமாறு:

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப் படி , கழக துணைப் பொதுச்செயலாளர் வனத்

துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் வழிகாட்டு தல் படி , கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் விழுப்புரம் (தெற்கு) மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூர், விக்கிரவாண்டி, விழுப்புரம், வானூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் களில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா தெருமுனை பிரசார கூட்டங்கள் 70 இடங்களில் 09.01.2025 தொடங்கி 10.01.2025, 11.01.2025 ஆகிய தேதிகளில் மாவட்டக் கழக பொறுப்பாளராகிய எனது (டாக்டர் பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் சட்டமன்ற மன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், இராகற்பகம், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் எம்.தேன்மொழி, தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது

விழுப்புரம் (தெற்கு) மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட ஒன்றிய நகர் பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும். ஒன்றிய, நகர, பேரூர் , கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மதுரை தெற்கு மாவட்டம் கள்ளிக்குடி தெற்கு ஒன்றியத்தில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், ஒன்றிய செயலாளர் பா.மதன்குமார் ஏற்பாட்டில் தேர்தல் பணியாளர்கள் கழக நிர்வாகிகள் ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட சுமார் ஆயிரம் பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன், கழக நிர்வாகிகள் எம்.முத்துராமலிங்கம், விமல், கே.எஸ்.ராமமூர்த்தி, ஜெகதீஷ், ஆதவன் அதியமான், சண்முகம்,, நாகராஜன், தனசேகர், ஞானசேகரன், ஆதிமூலம் மற்றும் கழகத்தினர் பயனாளிகள் உள்ளனர்.

சைதை பகுதியில் பொங்கல் விழா!

சென்னை, ஜன. 9 -

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்ட தி.மு.க. சார்பில் மாவட்டப் பிரதிநிதி வே.முருகன் தலைமையில், பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் முன்னிலையில் தமிழ்ப் புத்தாண்டு - தமிழர் திருநாள் பொங்கல் விழா நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 3000 பேருக்கு பரிசுகள் வழங்கினார்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172அ வட்ட திமுக சார்பில் (6.1.2025) அன்று காலை வட்டம் முழுவதும் தெருக்களில் உள்ள பல்வேறு இல்லங்களில் மாபெரும் கோலப் போட்டி மாவட்ட பிரதிநிதி வே.முருகன் தலைமையில் பகுதி செயலாளர் 13வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மகளிர்கள் தங்கள் இல்ல வாயில்களில் வண்ண வண்ண கோலங்கள் போட்டு வைத்தனர்.

காலை 7 மணி அளவில் நடுவர்கள் தெருக்கள் தோறும் நடந்தே வந்து கோலங்களை பார்வையிட்டு, பரிசுக்கான கோலங்களை தேர்ந்தெடுத்தனர்.

மாலையில் வேளச்சேரி 100 அடி சாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா மாவட்டப் பிரதிநிதி வே. முருகன் தலைமையில் நடைபெற்றது. இதில் பகுதிச் செயலாளர் இரா.துரை ராஜ் முன்னிலை வகித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முதல் பரிசாக வாஷிங் மெஷின், இரண்டாம் பரிசாக கிரைண்டர், மூன்றாம் பரிசா மிக்ஸி போட்டியில் பங்கேற்ற 3000 பெண்களுக்கு ஹாட் பாக்ஸ் ஆகிய பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடான 'திராவிடத்தால் வாழ்கிறோம்' நூல் சிந்துபாத் போல கதை அல்ல, நம் இயக்கத்தின் வரலாறு!

ஆளுமைகள் – வாசகர்கள் கலந்துரையாடலில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி பேச்சு!

சென்னை. ஜன. 9 -

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளது இளைஞர் அணியின் முத்தமிழ் றிஞர் பதிப்பகம். அந்த அரங்கில் திராவிட இயக்க ஆளுமைகள் - வாசகர்கள் சந்திப்பு. கலந்துரையாடல் நிகழ்ச்சி நாள்தோறும் நடக்கிறது. இதில் 06.01.2025 அன்று ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

சென்னையில், மதுரையில் என பெரு நகரங்களில் மட்டுமே நடைபெற்று வந்த புத்தகக் காட்சி, இப்போது மாவட்டம் தோறும் நடைபெறுகிறது. வாசிப்பை ஊக்குவிக்க 'திராவிட மாடல்' அரசு கொடுக்கிற முக்கியத்துவம் இது.

மையப்பொருளாக பேச வேண்டும்

இதற்கு முன்பு இதே அரங்கில் முந்தைய நாட்களில் பேசியவர்கள் காணொலிகள் முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் யூடியூப் சேனல் பதிவேற்றம் செய்துள்ளனர். அதைப்பார்க்கும்போது எல்லோரும் கூறிய தன் மையப்பொருளாக பேச வேண்டும், எழுத வேண்டும், வாசிக்க வேண்டும் என்பதாக இருந்தது.

தொகுதி தோறும் நூலகங்கள்

தி.மு.கழக இளைஞர் அணி அந்தப் பணியை சிறப்பாகச் செய்கிறது. தொகுதி தோறும் நூலகங்களை அமைக்கும் பணியை இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது. இந்த முயற்சியைப் பார்க்கும்போது 1967-ஆம் ஆண்டு காலகட்டம் திரும்புவதைக் கண்முன் பார்க்க முடிகிறது. சமூக வலைத்தளங்களில் பொய்ச்செய்தி பரப்புவதை தினம்தோறும் எதிர்கொண்டு வருகிறோம். இந்த அவதூறுகளை முறியடிக்க, நமக்கு வாசிப்பு மிக அவசியம்.

'திராவிடத்தால் வாழ்கிறோம்' என்ற நூலை முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இது சிந்துபாத் போல கதை இல்லை. நம் இயக்கத்தின் வரலாறு. குழந்தைகளிடம் சென்று சேர்க்கும் வகையில், ஓவிய வடிவில் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த நூலை எழுதிய பத்திரிகையாளர் கோவி.லெனின் அவர்கள் கொரோனா காலத்தில் பொய்ப்பெட்டி நிகழ்ச்சியை நடத்தினார். அதில் முறியடிக்கப்பட்ட அவதூறுகளை மீண்டும் யாரும் தூக்கிக்கொண்டு வருவதில்லை. இப்போது வேறு பொய்களை தூக்கிக் கொண்டு வருகிறார்கள். எனவே நாம் வாசிப்பை வளப்படுத்திக்கொண்டே அவதூறுகளை முறியடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

`நெஞ்சுக்கு நீதி' பல அரங்குகளில்

இந்த வருடம் புத்தகக் காட்சியில் `நெஞ்சுக்கு நீதி' பல அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. புத்தகக் காட்சி முழுவதும் பெரியார், அண்ணா நூல்கள் நிரம்பிக் கிடக்கின்றன. அப்படியானால் பெரியார், அண்ணா, கலைஞரின் கருத்துக்கள், நூல்களுக்குத் தேவை இருக்கிறது என்று அர்த்தம். ஆக, இந்தக் கருத்துக்களை இன்னும் வீரியமாக மக்களிடம் எடுத்துச்செல்வது எப்படி என்று நாம் சிந்திக்க வேண்டும்.

பேருந்துகள், பேருந்து நிலையங்களில் கூட திருக்குறளை எழுதிவைத்து வாசிப்பை ஊக்குவித்துக்கொண்டே இருக்கிறது இந்த இயக்கம். திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டே இருக்க வேண்டும். அதை விட்டுவிடக் கூடாது என்பது தான் நமது நோக்கம். அந்த நோக்கத்தின் தொடர்ச்சிதான் முத்தமிழறிஞர் பதிப்பகம். இந்த நூல்களை நாம் படிப்பதுடன், நம்மைச் சார்ந்து இருப்பவர்களையும் படிக்கத் தூண்ட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரைக் கண்டித்து

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

ச.தங்கவேலு தலைமையில் 500 பேருக்கு மேற்பட்டோர் பங்கேற்பு!

தென்காசி, ஜன. 9 -

தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும்,அவருக்கு துணை போகும் அ.தி.மு.க.பா.ஜ.க.கள்ளக் கூட்டணியையும் கண்டித்து தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் சங்கரன்கோவில் தபால் நிலையம் முன்பு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்,முன்னாள் அமைச்சர் தலைமை செயற்குழு உறுப்பினர் ச.தங்கவேலு தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் யூ.எஸ்.டி. சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவரணி இணை செயலாளர் செண்பகவிநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று கண்டன கோஷங்களை எழுப்பினர்.

நிகழ்வில் மாவட்ட பொருளாளர் இல.சரவணன்,துணைச் செயலாளர்கள் புனிதா, மனோகரன், ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிச்சாமி, மகேஸ்வரி, தேவதாஸ், ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பூசைப்பாண்டியன், பெரியதுரை,வெள்ளத்துரை, பால்ராஜ், ராமச்சந்திரன், சேர்மதுரை, கிறிஸ்டோபர்,

நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்)அந்தோணிசாமி (புளியங்குடி) பொருளாளர் லாசர், மாவட்ட முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் சோம செல்வ பாண்டியன்,பேரூர் செயலாளர்கள் ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து,கே.டி.சி.குருசாமி, அணி அமைப்பாளர்கள் அன்பு மணி கணேசன்,உதயகுமார், மணிகண்டன்,நாகூர் கனி, கிப்ட்சன், சந்திரன், சரவணன், பசுபதிபாண்டியன்,

அணி துணை அமைப்பாளர்கள் செல்வராஜ்,ராஜவேல் ரத்தினம், கணேசன்,ஜலால்,வீரமணி,அன்புராஜ், முத்துக்குமார், வழக்கறிஞர்கள் முத்துராம லிங்கம், முத்துவேலன், தொ.மு.ச. மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், மின்வாரிய தொ.மு.ச. திட்ட செயலாளர் மகாராஜன்,திட்ட தலைவர் சரவண முருகையா,திட்ட பொருளாளர் சத்யராஜ்,வார்டு செயலாளர்கள் வாழைக்காய் துரை பாண்டியன், வீராச்சாமி, தங்கவேலு, காளிசாமி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், காங்கிரஸ் கட்சி மனோகரன், ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், சி.பி.ஐ.இசக்கி துரை, வி.சி.க.லிங்கவளவன் மற்றும் பேரூர் கழக, கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் உள்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க.காசிநாதன் (எ) தமிழரசன்

சனவரி 9 (2013)

சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.